**தலைப்பு 295 – வாணிப திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

வாணிப திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வாணிப திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் வாணிப திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 பெப்ரவரி 02 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதி இலக்கம் 271/2019 கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாட்டின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வாணிப திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) சென்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை விஞ்சிய பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள முடியாதாயினும் 02 மீண்டுவரும் செலவின விடயங்கள் சம்பந்தமாக மிகுதியினை விஞ்சிய மொத்தத் தொகை ரூபா 1,883,623 ஆன பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 94(1) செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படாது. | 2018 வருடம் தொடர்பான பொறுப்புக்களை மீளாய்வு ஆண்டு ஆரம்பத்தில் தீர்த:து வைத்ததன் காரணமாக ஒதுக்கீடுகள் போதாமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படுவதனை குறைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு குறித்துக் கொண்டேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271/2019 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம், குறிப்புரை இலக்கம் (iii) கீழான தொடர்புகளை மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்று, திறைசேரியினால் ஒவ்வொரு தலைப்புக்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படும் தொடர்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றுடன், உடன்பட வேண்டியிருந்த போதிலும், அவ்ஆவணம் 02 இற்கும் இடையில் ரூபா 2,529,277 க்கான வேறுபாடு காணப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271/2019 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. | திறைசேரியினால் விடுக்கப்படும் தொடர்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றுடன் திணைக்களத்தின் பொறுப்புக்களுக்கான ஆவணம் வேறுபடுவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தியது, திறைசேரியில் தொடர்புகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் குறிப்பிடப்பட்டிராத செலவின விடயங்களின் கீழான தொடர்புகள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமான சேவைகளை பெற்றுக் கொள்வது ஆகும். |

## 2.2 அரச ஊழியர்களுக்கு முற்பணம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சரி செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு திணைக்கள புத்தகங்களில் காணப்படும் மிகுதி மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிக்கிடையில் ரூபா 291,367 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திணைக்கள புத்தகங்களின் படியான மிகுதி மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிப் படியான மிகுதி ஒன்றோடு ஒன்று ஒத்ததாக இருத்தல் வேண்டும். | இவ்வேறுபாடு கடந்த வருடங்களிலிருந்து வருவதாகும். இதன் காரணமாக 2005 ஆம் ஆண்டு முதற்கொண்டு கணக்குகள் இனங்காமையினால் அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் அதற்கு சில காலம் செல்லும், எதிர் வருடம் கணக்குகளை திருத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வெளிநாட்டு தூதராக சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர் ஒருவரினது, 2019 ஆகஸ்ட் மாதம் முதல் கொண்டு ரூபா 243,512 க்கான கடன் மிகுதி தொடர்பான தவணை அறவீடு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வெளிநாட்டு விவகார அமைச்சின் மூலம் சம்பந்தப்பட்ட தகவல்களை பெற்றுக் கொண்டு திணைக்கள புத்தகங்களில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். | ஒரு உத்தியோகத்தர் 2019 ஆகஸ்ட் மாதம் முதல் வெளிநாட்டு தூதராலய சேவையில் ஈடுபட்டு இருப்பதனால் அவ் உத்தியோகத்தரின் கடன் தவணையினை அறவிடப்படுவதை அத்தினத்திலிருந்து வெளிநாட்டு விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்விபரங்கள் எமது திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு இல்லாமையினால் திணைக்கள புத்தகங்களில் பதிவிட முடியாது உள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வர்த்தக செயற்பாட்டு நிவாரண அலவினை ஒன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும், செயல் முறை திட்டத்தில் காட்டப்பட்டிருப்பது போன்று இவ் அலகினைக்கு பொருளாதார நிபுணர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்தல் அத்துடன் அதிகாரச் சட்டம் தொடர்பாக பிரமாணங்களை உருவாக்கும் செயற்பாடுகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்முறை திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட வருடத்தினுள் நிறைவேற்றப்பட வேண்டும். | பத்திரிகை விளம்பரம் மூலம் பொருளாதார நிபுணர் ஒருவரை ஆட்சேர்ப்பு கொள்வதற்கான நடவடிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதிகாரச் சட்டம் தொடர்பான பிரமாணங்களும் தயாரி செய்யப்பட்டு வருகின்றன. வர்த்தக நிவாரண சட்டத்தினை 2020 ஒக்தோபர் 19 ஆந் திகதி முதல் வலுவூட்டுவதற்கு விடய அமைச்சர் 2020 ஒக்டோபர் 09 ஆந் திகதி கைச்சாத்திட்டு இருந்தார். |

| | | |
|---|---|---|
| (ஆ) திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டிற்கான 14 செயலாற்றுகை உருவாக்கங்களை இனங்கண்டு இருந்தன. இதில் பாரமற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வரிச் சலுகை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளல், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் வரிச் சலுகை பெற்றுக் கொள்ளும் பொருட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளல், பன்முக தரப்புகளுக்கிடையே இலங்கையின் பிரியத்தினை பேணுதல், அறிக்கையிடப்பட்ட சந்தை அணுகுமுறை தொடர்பான சர்ச்சைகளில் தலையீடு செய்து தீர்வு காணல் ஆகிய 04 உருவாக்கம் தொடர்பான இலக்கினை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அக்காரியங்களை நிறைவேற்றுவதற்கும் செயற்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை உருவாக்கங்கள் தொடர்பான இலக்குகளை தீர்மானிக்கப்பட்டு அவைகளை அடைவதற்கான செயற்பாடுகளை செய்யப்படல் வேண்டும். | இல் 04 காரியாலயங்களின் இயல்பின் படி ஒரு இலக்கினை வழங்குவது நடைமுறைப்படி இயலாது அனுமானிக்கப்பட்டாலும், இலக்கினை வழங்க முடியாது. இச்செயற்பாடுகள் தற்போதைய அரசின் கொள்கை சட்டகத்தின் மீது நிறைவேற்றப் படுகின்றது. தற்போதைய அரசின் வழிகாட்டனினை பெறப்படாவிடிக் அவையினை நிறைவேற்ற முடியா. |

## 3.2 எதிர்பார்த்த உற்பத்தி அளவினை பெற்றுக்கொள்ளாமை

---------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நடாத்தப்பட்ட ஒன்றிணைந்த குழுக் கூட்டத் தவணை எண்ணிக்கை மற்றும் இலங்கையில் நடாத்தப்பட்ட வர்த்தக கண்காட்சிகளுக்காக பங்குபற்றல் கொள்வனவுக்கான வெளிநாட்டு தூதுக் குழுவினை தயார் செய்தல் ஆகிய செயலாற்றுகை உருவாக்கங்களை அடைவதற்கான முன்னேற்றம் நூற்றுக்கு 40 க்கு குறைவான பெறுமானத்தினை பெற்றுக் கொண்டிருந்தது. | செயல் முறை திட்டத்தில் காட்டப்பட்டிருந்த முன்னேற்றத்தினை அடைவதற்கு செயற்பட வேண்டும். | ஒன்றிணைந்த குழுக் கூட்டம் எல்லாவற்றையும் ஒரு வருடத்தினுள் நடாத்துவது இயலாது. ஆகையினால் வருடம் தொடர்பான சகல ஒன்றிணைக்கப்பட்ட அதிகார சபைகள் இலக்காக எடுக்கப்படும். அதில் நடைமுறைப்படி நடாத்தப்படுவது 02 அல்லது 03 மாத்திரமே. வர்த்தக காட்சி அறைகளின் நிலையும் |

| | | | |
|---|---|---|---|
| | | | இதை ஒத்ததாக இருக்கிறது. ஆகையினால் நூற்றுக்கு 40 க்கான முன்னேற்றம் காணப்படுகின்றது. |
| (ஆ) | சலுகையற்ற உற்பத்தி இடத்திற்கான ஒழுங்கு வடிவம் ஒன்றினை உருவாக்குவதற்காக இலங்கை சங்கம், மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து நடைமுறை ஒன்றினை தயாரித்தல் 2018 வருட செயல் முறை திட்டத்தில் காட்டப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதனை மேற்கொள்ளப்படவில்லை. | செயல் முறைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை சம்பந்தப்பட்ட வருடத்தினுள் நிறைவேற்றப்பட வேண்டும். | 2019 வருடம் இந்த வரிகாட்டனினை மீண்டும் ஒழுங்கு படுத்த நேர்ந்தது. இது தொடர்பாக இலங்கை சுங்கத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இதில் உள்ள சிக்கல் நிலை காரணமாக ஆழமாக அவதானிக்கப்பட வேண்டும். ஆகையால் இச்செயலினை 2019 வருடம் முடிக்க முடியாமல் போயிற்று. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் குறுக்கப்பட்ட 2018 சனவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2018 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களால் பெற்றுக் கொடுக்கப்படும் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் சென்ற 03 வருட காலத்தினுள் திருத்தப்படாது. இருப்பின் அக்கட்டணங்களை நூற்றுக்கு 15 ஆல் திருத்தப்பட்டு திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் குறுக்கப்பட்ட 2018 சனவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2018 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டண திருத்தத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். | கட்டண திருத்தத்திற்கான நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

எவ்வாறாயினும், திணைக்களத்தினால் ஈட்டு சட்டத்தின் கீழ் கடன்கொடுக்கப்படும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக அறவிடப்படும் கட்டணத்தினை 2003 யூன் 09 ஆந் திகதியும் ஏனைய கட்டணங்கள் 2014 சனவரி 01 ஆந் திகதியன்றும் இறுதி முறையாக திருத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1949 இலக்கம் 6 கொண்ட ஈட்டுச் சட்டம், 1947 இலக்கம் 12 கொண்ட நம்பிக்கை அதிகாரச் சட்டம் மற்றும் 1990 இலக்கம் 14 கொண்ட உள்நாட்டு நம்பிக்கை பற்றுச்சீட்டு சட்டத்தின் கீழ் கடன் கொடுக்கும் நிறுவனங்களை பரிந்துரைக்கும் குழுவின் பரிந்துரை மீது கடன் கொடுக்கும் நிறுவனங்களை பிரகடனப்படுத்தும் அதிகாரத்தினை வாணிப பணிப்பாளர் தலைமை அதிகாரத்தினை வாணிப பணிப்பாளர் தலைமை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் படி 1973 செப்டம்பர் முதல் 2019 திசெம்பர் வரை ஈட்டுசட்டத்தின் 114(1) பிரிவின்பிரகாரம் கடன் கொடுக்கும் 391 நிறுவனங்களை பரிந்துரைக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. இந்த சகல நிறுவனங்களும் நிகழ்காலத்திலும் செயற்படுகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மீண்டும் பதிவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முறையொன்றினை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. அதேபோன்று நிறுவனங்களின்

அங்கீகரிக்கப்படும் கடன் கொடுக்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்து வதற்கான பொறிமுறையினை தயாரித்தல் மற்றும் அவைகளின் செயற்பாடுகள் தொடர்பாக இற்றைப் படுத்தப்பட்ட தகவல்களை பேணப்படுதல் வேண்டும்.

2019 வருடம் முதல் கடன் கொடுக்கும் நிறுவனங்களை பரிந்துரைக்கும் போது பரிந்துரை சபையினால் தமது பரிந்துரையினை 03 வருட கால எல்லைக்குள் ஆதிக்கம் செலுத்தும் விதமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற படியால் அவர்கள் மீள் பதிவுக்காக விண்ணப்பிக்கும் போது அவர்களினது நிதி நிலைமையினை தொடர்பாக கற்கையொன்று செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் மற்றும் நிதி நிலைமையினை மீளாய்வு செய்து கொள்வதற்காக முறையான முறையொன்றினை மீளாய்வு ஆண்டு இறுதி வரை செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய இலக்கம் 2187/27 கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் படி 1949 இலக்கம் 06 கொண்ட ஈட்டு சட்டத்தினை செயற்படுத்தபடுகின்றமை ஒழுங்கு அமைச்சினதும் விடய எல்லைக்கு உரியதாக இல்லாததன் காரணத்தினால் அந்த சட்டத்தின் 114 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் கடன் கொடுக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் செயலினை அத்திகதியிலிருந்து ஸ்தம்பிதம் அடைந்து இருந்தது. | கடன் கொடக்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் செயற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு உள்ள முட்டுக் கட்டையினை உடன் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இக்காரியத்தினை மேற்கொண்டு நடைமுறைப் படுத்தி செயல்படுத்துவதற்கு நிதி அமைச்சின் கீழ் வர்த்தமானியில் பிரசுரித்து இத்திணைக்களத்தினால் செயற்படுத்துவதற்காக அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் முறைத்திட்டத்தின் படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய முன்னேற்ற அறிக்கையினை 2017 சனவரி 13 ஆந் திகதிய இலக்கம் 01/2017 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 05 ஆந் திகதிய இலக்கம் (1)/01/2017 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டி உள்ள போதிலும் அதன் படி செயல்பட்டிருக்கவில்லை. | 2017 சனவரி 13 ஆந் திகதிய இலக்கம் 01/2017 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 05 ஆந் திகதிய இலக்கம் (1)/01/2017 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் பிரகாரம் | செயல்முறைத் திட்டத்தின் படி திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையினை எதிர்காலத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | இதன் காரணமாக செயல்முறை திட்டத்தில் காட்டப்பட்டுள்ள காரியங்களை நிறைவேற்றுவதன் முன்னேற்றத்தினை தொடர்பாக ஒப்பீட்டு அவதானிப்பு ஒன்றினை செய்ய முடியாது போயிற்று. | செயற்பட வேண்டும். | |
| (ஆ) | வெளிநாட்டு வர்த்தகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பணி வெளிநாட்டில் உள்ள 30 இலங்கை தூதரகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 32 அதிகாரிகளை கொண்டுள்ளது. இத் தூதரகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய 19 பணிகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அப் பணிகள் நிறைவேற்றப்பட்டமையை அளவிடுவதற்காக ஒவ்வொரு வெளிநாட்டு வாணிப அதிகாரிகளின் செயலாற்றல் தொடர்பான முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத்திட்டத்திற்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு வாணிப அதிகாரியினாலும் 2019 ஆம்வருடத்திற்குள் நிறைவேற்றப்பட்ட பணிகள் உள்ளடங்கிய அறிக்கையொன்று எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய இலக்கம் DMA/01-2019 கொண்ட சுற்றறிக்கையின் 5.3 பந்தியின் படி ஒரு வருடத்தினுள் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 04 ஆவது நடாத்தப்பட வேண்டியுள்ள போதிலும் திணைக்களத்தினால் மீளாய்வு ஆண்டினுள் ஒரு குழுக் கூட்டமாவது நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 சனவரி 12 ஆந் திகதிய இலக்கம் DMA/01-2019 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். | இத்திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வு பிரிவொன்று இல்லாததுடன் வரை அமைச்சின் மூலம் அச்செயல் மேற்கொள்ளப்படுகின்றது. |

அதேபோன்று வரை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் மீளாய்வு வருடத்திற்கான உள்ளக கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை செலவிடப்பட்டிருக்கவில்லை.

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் 152 இக்கான இந்த திணைக்களத்தில் மீளாய்வாண்டு இறுதியில் சிரேஷ்ட மட்டத்திலான 10 வெற்றிடங்கள் மூன்றாம் மட்டத்திலான 01 வெற்றிடம் இரண்டாம் மட்டத்திலான 17 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்டத்திலான 05 வெற்றிடங்கள் உட்பட 33 பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவியதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் நூற்றுக்கு 22 ஆகும். அதன் படி திணைக்களத்தின் அலுவல்களை தடையின்றி மேற்கொண்டு செல்ல தேவையான பணிக் குழூாமினை ஆட்சேர்ப்பினை செய்து கொள்வதற்கு இயலாது இருந்தது. | திணைக்களத் தினால் அத்தியா வசியமான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ஆ) இந்த திணைக்களத்தில் விசேட தரத்திலுள்ள உயர் பதவியினையாகிய வாணிபப் பணிப்பாளர் தலைமை அதிபதி பதவி 2019 செப்டெம்பர் 11 ஆந் திகதி முதல் வெற்றிடமாகஉள்ளது. அத்திகதி முதல் மேலதிக வாணிப பணிப்பாளர் தலைமை அதிபதி, வாணிப் பணிப்பாளர் தலைமை அதிபதி பதவியில் பதில் | உயர் முகாமைத்துவ வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கடமையாற்றிய போதிலும் 2020 மே 30 ஆந் திகதி அவ் அதிகாரியும் ஓய்வு பெற்று போனதன் மூலம் வாணிப பணிப்பாளர் தலைமை அதிபதி மற்றும் மேலதிக வாணிப பணிப்பாளர் தலைமை அதிபதி ஆகிய இரு பதவிகளும் வெற்றிடங்கள் ஆயிற்று இவ்வாறு நிறைவேற்று மட்டத்திலான உயர் பதவிகள் இரண்டும் வெற்றிடங்களாக நிலவும் நிலைமையினுள் இலங்கையில் கடமையில் ஈடுபட்டிருந்த மூத்த மற்றும் ஒரே வாணிப பணிப்பாளர், வாணிப பணிப்பாளரை தலைமை அதிபதி பதவியில் பதில கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்று வரைவு செய்யப்பட்டு வரை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அமைச்சரவையின் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | | |
| (இ) | பணிப்பாளர் (இலங்கை நிர்வாக சேவையின் (1)) பதவியினை அங்கீகரிக்கப்பட்ட தினம் (2014 யூன் 25) முதல் இதுவரையிலும் வெற்றிடமாக நிலவுகின்றது. இதற்கான அதிகாரி ஒருவரை ஒன்றிணைக்கும் படி பொது நிர்வாக அமைச்சிடம் பல வேண்டுகோளினை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அந்நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் உதவி வாணிப பணிப்பாளர் பதவிகள் 06 வெற்றிடங்களாக இருப்பதுடன் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கான பரீட்சை நடாத்துவதற்கு தேவையான அறிவித்தல் பரீட்சைத் | அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் வெற்றிடங்கள் நிலவுவது நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு தாக்கத்தினை உண்டு பண்ணுவதனால் சம்பந்தப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மேலதிக வாணிப பணிப்பாளர் தலைமை அதிபதி பதவிக்காக 2018 யூன் 01 முதல் 2019 செப்தெம்பர் 10 வரை வாணிப பணிப்பாளர் ஒருவர் பதில் பணிபுரிவதற்கான அடிப்படையில் நியமிக்கப்பட்டார். இலங்கை நிர்வாக சேவையில் (1) பதவிக்காக அதிகாரி ஒருவரை நியமிக்கும் படி பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை யிடப்பட்டு உள்ளதுடன் உதவி வாணிப பணிப்பாளர் பதவிகள் 06 க்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை |

திணைக்களத்தின் அவதானத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான தாமதம் காரணமாக வெளிநாட்டு தூதரக அதிகாரிகளை நியமிப்பதும் இயலாது இருந்தது. அது திணைக்களத்தின் செயலாற்றுகை அலுவல் மீது மோசமான தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.